மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாக, இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை, அப்படி நிறைவேற்றப்பட்டிருக்குமானால், அது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படுமானால் அதை அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஏனெனில், இப்போது கரும்பு கொள்முதல் செய்கிற போது, கரும்பு விவசாயிகள் ஆலைகளுக்குக் கொண்டு வந்து விற்கிறபோது, ஒரு டன் ஒன்றுக்கு 5 ரூபாய் செஸ் என்று விவசாயிகளிடத்திலிருந்து வாங்கி, அதைக் கரும்பு ஆலைகள் அரசாங்கத்திற்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி வருகிற அந்தப் பணத்திலேயிருந்து, போக்குவரத்தினாலே, அந்தப் பகுதிச் சாலைகள் பழுதடைந்து விடுகின்றன என்ற அடிப்படையில் அந்தச் சாலைகளைச் சீர்ப்படுத்துவதற்காக அந்த நிதி செலவழிக்கப்படுகிறது. அதைப் போல, நம்முடைய நாகை-காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் இப்படி அதிகமாக லாரிகள் போக்குவரத்து ஏற்படுகிறது என்ற காரணத்தினாலும், இயற்கையாக ரோடுகள் பழுதடைந்தாலும் அதனாலும் அதிக பழுது அடைவதற்குக் காரணமாக இருக்கிற அந்தச் சூழ்நிலையையொட்டி, விவசாயிகள் மனமுவந்து ஒரு ரூபாய் கொடுக்க முன்வருவார்களானால், அதைப் பெற்று, அந்தச் சாலைகளை எல்லாம் சீர்திருத்தவும், மேம்படுத்தவும், நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 43, டாக்டர் மு. காளிராஜன், இருக்கையில் இல்லை; அவருக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன் கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

43—

மருத்துவத் துறையில் பட்ட மேற்படிப்பு மட்டும் கொண்டுவரும் திட்டம்.

*10386—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் பட்டப் படிப்பை நீக்கி விட்டு பட்ட மேற்படிப்பு மட்டும் கொண்டு வரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

1994 மார்ச் 10]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ முகாம், 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டம் போன்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அன்னை தெரசா நேரில் வந்து மன தாரப் பாராட்டுகின்ற அளவிற்கு செயல்படும் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, மக்கள் நலம் பெற தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் வாய்ப்பு உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில், டிப்ளமோ கோர்ஸ் அபாலிஷ் செய்யப்பட்டு, டிகிரி கோர்ஸ் மட்டும் வைக்கப்படுமா என்பது குறித்த கேள்வி. எல்லா இடங்களிலும் துவக்கப்படுமா, மற்ற மருத்துவக் கல்லூரிகளிலும் துவக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். இப்போது நம்முடைய மருத்துவக் கல்லூரி களைப் பொறுத்தவரையிலும் இந்த டிகிரி கோர்ஸ் படிப்பதில் மெடிக்கல் கவுன்சில் சில நார்ம்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த நார்ம்ஸ்படி வசதிகள் எங்கே இருக்கிறதோ அந்த அடிப்படையில் வைத்திருக்கிறோம். குறிப்பாக தனியாருக்குக் கொடுக்கின்ற உத்தேசம் நமக்கு இல்லை. அரசுத் துறைக் கல்லூரியிலே அந்த நார்ம்ஸ் அடிப்படையிலேதான் இப்போது நடந்துகொண்டிருக் கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: டாக்டர் க. கோபால்

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற 1992-93 ஆம் ஆண்டுக்கு முன்னர், எந்த ஒரு பட்டமேற்படிப்பு படிக்கவேண்டுமென்றாலும், அதற்கு அதைச் சார்ந்துள்ள ஒரு டிப்ளமோ படித்து விட்டுத்தான் அந்த பட்டமேற்படிப்பு படிக்க வேண்டும் என்ற நிலை இருந்தது. சென்ற ஆண்டு முதல் எந்த டிகிரி மற்றும் டிப்ளமோ படிக்க வேண்டுமென்றாலும், அதைப் படிக்கலாம் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதுபோன்று எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு, எம்.சி.எச். நியூராலஜி என்ற பட்ட மேற்படிப்பு

படிப்பதற்கு ஒரே ஒரு படிப்பிற்கு மட்டும்தான் நேரடியான வாய்ப்பு இருந்தது. அதுபோன்று எம்.சி.எச். நியூராலஜி படிப்பது போல் மற்ற அனைத்துத் துறைகளிலும் எம்.பி.பி.எஸ். முடித்த கையோடு படிக்க வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே 3 விதமாக இருக்கிறது. எம்.பி.பி.எஸ். முடித்த உடனே டிப்ளமோ, அதற்குப் பின்னர் பி.ஜி. அதற்குப் பின்னர் சூப்பர் ஸ்பெஷாலிடி அமைந்திருக்கிறது. உச்சநீதி மன்றத்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு உத்தரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவிலே 7 ஆண்டுக்காலம் கால அவகாசம் கொடுத்து, அதற்குள்ளாக இந்திய துணைக் கண்டம் முழுவதும் ஒரே மாதிரியான நிலையை உருவாக்க வேண்டுமென்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பில் டிப்ளமோ கோர்ஸ் படித்துவிட்டுத்தான் போஸ்ட் கிராஜுவேட் டிகிரி கோர்சுக்கு வரவேண்டுமென்ற நிலையை மாற்றி, எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு, நேரடியாக போஸ்ட் கிராஜுவேட் டிகிரிக்கு வரலாம் என்ற நிலையை உருவாக்குகிற ஏற்பாட்டை அவர்கள் செய்திருக்கிறார்கள். மெடிக்கல் கவுன்சிலும் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான நார்ம்ஸ் ஏற்படுத்தி, அந்த அடிப்படையிலே ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இந்த ஆண்டிலிருந்து அதைப் போலவே செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்காக டிப்ளமோ கோர்சை நாம் அபாலிஷ் செய்ய வில்லை. டிப்ளமோ கோர்ஸ் இருக்கட்டும். ஆனால் டிப்ளமோ கோர்ஸ் படித்துவிட்டுத்தான் பி.ஜி. டிகிரிக்கு வர வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை என்ற வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. டிப்ளமோ இருக்க வேண்டுமென்று நாம் நடவடிக்கை எடுத்திருப்பதற்குக் காரணம், கிராமப் புறங்களுக்குப் போய் பணியாற்ற வேண்டுமென்றால், அதற்கு டிப்ளமோ போதும் என்று யாராவது கருதினால் அந்த டிப்ளமோ படித்துவிட்டு அவர்கள் போகலாம் என்று வகை செய்யப் பட்டிருக்கிறது. சூப்பர் ஸ்பெஷாலிட்டியைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு கோர்சுக்கு மட்டும் நேரடியாக எம்.பி.பி.எஸ். முடித்து விட்டு 5 ஆண்டுக் காலம் படித்தால் எம். சி. எச். படித்து விடலாம் என்ற நிலையிலே ஒரே ஒரு கோர்ஸ் இருக்கிறது. ஆனால் மற்றவற்றுக்கு அதை எக்ஸ்டெண்ட் செய்கிற நிலை இப்போது இல்லை. மெடிக்கல் கவுன்சிலே நார்ம்ஸ் கொடுத் திருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்துதான் செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

1994 மார்ச் 19]

முற்பகல் 10-20

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் எம்.பி.பி.எஸ். முடிக்கிற பட்டதாரிகள் யாராக இருந்தாலும் எம்.பி.பி.எஸ். உடன் நிறுத்திக்கொள்ள விரும்புவதில்லை. மேற்கொண்டு எம்.டி., எம்.எஸ். போன்ற பட்டப் படிப்புகள் அல்லது டி.சி.எச். டி.ஓ. போன்ற பட்டயப்படிப்புகளை படிக்க விரும்புவது உண்மை தான். ஆனால் அந்த முறை நம் நாட்டில் மட்டும் தான் இருக்கிறது. இன்றைக்கு அமெரிக்க ஐரோப்பிய நாடுகளைப் பார்த்தால் அங்கே எம்.பி.பி.எஸ்.-ஏ கிடையாது. நேரிடையாக 7 ஆண்டுக் காலம் படித்து விட்டு அவர்கள் எம்.டி. முடித்துக் கொள்ளலாம். அல்லது கோர்ஸையே முடித்துக் கொள்ளலாம். அதற்குப் பின்னாலே வேண்டுமானால் அவர்கள் சூப்பர் ஸ்பெஷலைசேஷன் பண்ணிக் கொள்ளலாம். அந்த முறையில் அட்வான்டேஜ் என்னவென்றால் அவர்கள் படித்துவிட்டு பாஸ் செய்துவிட்டு வெளியே வருகிறபோதே போஸ்ட்கிராஜுவேட்டாக வெளியே வருகிறார்கள். அவர்கள் உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டில் அந்த முறையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இங்கே உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்து இருக்கிறது என்று. அந்த தீர்ப்பு என்னவென்றால் ஒரே மாதிரியாக நாடு முழுவதும் மருத்துவக் கல்வி பின்பற்றப்பட வேண்டும் என்று சொல்வது. அது உண்மைதான். ஆனால் இப்போது என்னுடைய கேள்வி என்னவென்றால் நாம் நம்முடைய நாட்டிலே இருக்கிற மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, எப்படி ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளிலே நேரிடையாக பட்ட மேற்படிப்புக்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறதோ, அதேபோல எம்.பி.பி.எஸ். முடித்து விட்டு மேற்கொண்டு படிக்கவேண்டும் என்று சீட்டு வாங்க வேண்டும் என்று கஷ்டப்படுகிறார்கள். அந்த முறையைத் தவிர்ப்பதற்காக நேரிடையாக பட்ட மேற்படிப்புக்கு வழி செய்யும் வகையிலே நம்முடைய நாட்டிற்கே முன்னோடியாக விளங்க, நேரிடையாக பட்ட மேற்படிப்பு படிக்க வழி வகை செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு நல்ல முறை தான். ஆனால் நம்முடைய நாட்டிலே அதை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்தாக வேண்டும். காரணம் எம்.பி.பி.எஸ். முடித்த பின்னாலே இப்போதும் சரி, இதற்கு முன்னாலேயும் சரி, டாக்டர்கள் போதிய அளவிலே இல்லை என்று இருந்த காலத்திலே மருத்துவர்கள் படித்து ஃபைனல் இயர் வருகிற போதே அவர்களுக்கு போஸ்டிங் வந்து விடும். எனவே அப்படிப் பட்டடிமாண்ட் இருந்த காலத்திலே எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு

அவர்கள் பணியாற்றச் செல்லட்டும், அதற்குப் பின்னாலே வேண்டுமானால் மேற்படிப்பு படித்துக் கொள்ளட்டும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு ஓரளவுக்கு நிலைமை சீர் அடைந்து இருக்கிறது. இருந்தாலும் கூட நம்முடைய மருத்துவக் கல்லூரிகளிலே இருக்கிற வசதிகளை வைத்துப் பார்க்கிற போதே, இங்கே ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 1,072 பேர்கள் இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளிலே சேர்கிறார்கள். இந்த 1,072 பேர்களும் தொடர்ந்து பி.ஜி. கோர்ஸ் படிக்க வேண்டிய நிலை இருக்கிறதா என்று சொன்னால், அன்டர்-கிராஜுவேட்டுக்குத் தேவையான வசதிகளை வைத்திருக்கிறோம். ஆனால் போஸ்ட் கிராஜுவேட்டுக்குத் தேவையான வசதிகள் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் இல்லை. எவ்வளவு பேர்களைத் தேர்ந்து எடுக்க முடியுமோ அவர்களை என்ட்ரன்ஸ் எக்ஸாம் மூலம் தேர்ந்து எடுக்கிறோம். இன்னொன்று எம்.பி.பி.எஸ். படித்து விட்டு வெளியே போய் அவர்கள் பணியாற்றட்டும். 5 ஆண்டுக் காலம், 6 ஆண்டுக் காலம் அவர்கள் பயிற்சி பெறுகிறபோது இன்னும் கொஞ்சம் திறமையாக போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. எனவே எப்படி இருந்தாலும் கூட இதிலே மாற்றி அமைக்கிற நிலைமைகளை மெடிக்கல் கவுன்சில்தான் செய்ய வேண்டுமே தவிர அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது. பரிந்துரை அனுப்பலாம். ஆனால் மெடிக்கல் கவுன்சில்தான் இதிலே முடிவு எடுக்க வேண்டும். நம்முடைய கையிலே இல்லை. எனவே நேரிடையாக எம்.பி.பி.எஸ். முடித்த பின்னாலே பி.ஜிக்கு அவர்கள் என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதி நேரிடையாகச் சென்று படித்து வருகிறவர்களே நிறைய பேர் இருக்கிறார்கள். அதுவும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதிலே எந்த மாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னாலும் மெடிக்கல் கவுன்சில்தான் செய்ய வேண்டும். நம்முடைய கையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 44, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

44—

விருத்தாசலம் அரசு மருத்துவ மனையில் பெண் நோயாளிகளுக்கென புதிய கட்டிடம் கட்டுதல்.

*22126—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS